33

॥ श्रीः ॥



கும்பகோணம் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள்.

ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

धर्मं स्थापयितुं परं समभवद्यो गर्भवासश्रमं
नारीरत्नमसूत यत्पदरजःसङ्गात् शिलापि स्वयम् ।
राज्यं यत्कृपयाऽसपत्नमभजच्छाखामृगोऽपि द्रुतं
सोऽयं दाशरथिः प्रभुः कलयतां श्रेयांसि भूयांसि नः ॥

𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌪𑌰𑌂 𑌸𑌮𑌭𑌵𑌦𑍍𑌯𑍋 𑌗𑌰𑍍𑌭𑌵𑌾𑌸𑌶𑍍𑌰𑌮𑌂
𑌨𑌾𑌰𑍀𑌰𑌤𑍍𑌨𑌮𑌸𑍂𑌤 𑌯𑌤𑍍𑌪𑌦𑌰𑌜𑌃 𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 𑌶𑌿𑌲𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌕𑍃𑌪𑌯𑌾𑌽𑌸𑌪𑌤𑍍𑌨𑌮𑌭𑌜𑌚𑍍𑌛𑌾𑌖𑌾𑌮𑍃𑌗𑍋𑌽𑌪𑌿 𑌦𑍍𑌰𑍁𑌤𑌂
𑌸𑍋𑌽𑌯𑌂 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌕𑌲𑌯𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌭𑍂𑌯𑌾𑌂𑌸𑌿 𑌨𑌃 ।

உலகில் தர்ம்மத்தை ஸ்தாபனம் செய்வதின் பொருட்டே எவர்மாதாவின் கர்ப்பவாஸத்தினுல் ஏற்படும் சிரமத்தை வகித்தாரோ? கல்லுக்கூட எந்தப் பிரபுவினுடைய சரணதூளியின் ஸம்பந்தத்தால் உத்தமமான ஸ்திரீயை உண்டு பண்ணிற்ருே? சாகாமிருகமென்கிற குரங்கும் எவருடைய கருணையால் சீக்கிரமாக சத்துருவில்லாத ராஜ்யத்தைப்பெற்றதோ அவ்வித மகிமைவாய்ந்தவரும் பிரபுவாயும், தசரதருடைய அருமைப் புதல்வருமான ஸ்ரீ ராமமூர்த்தியானவர் நமக்கு அதிகமான சிரேயஸ்ஸை உண்டுபண்ணட்டும்.

மூவுலகங்களுக்கும் அதிபதியாயும், சிருஷ்டி ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிற முககர்ம்மாக்களையும் செய்யும் சக்தி பொருந்தியவருமான யாதொரு பிரபுவானவர் தர்மத்தை உலகில் நன்கு நிலைநாட்டவேண்டித் தமக்குத்தகாததான கர்ப்பவாஸத்தாலேற்படும் சிரமத்தை வகித்தாரோ எந்தப் பிரபுவின் பாததூளியின் சம்பந்தத்தால் சிலைகூட அகல்யை என்கிற ஸ்திரீ ரத்னத்தை உண்டுபண்ணித்தோ? சாகாமிருகமான சுக்ரீவனும் எந்தப்பிரபுவினுடைய கிருபையால், கிஷ்க்கிந்தா ராஜ்யத்தை யடைந்தானே? அவ்வித சக்திபெற்ற தசரத குமாரனுன ஸ்ரீ ராமபத்திரானவர் நமக்கு சகலமான சிரேயஸ்ஸையும் கொடுக்கட்டும்.

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய ௵ தை-௴ ௭௨


ஆர்யதர்மம்.

## 12-ஆவது ஆண்டின் துவக்கம்.

वृषाकपिकृपालम्बादार्यधर्माभिवर्धनम् ।
कलयन्सन्मुदा साकमार्यधर्मो विभात्वयम् ॥

வ்ருஷாகபிக்ருபாலம்பாதார்யதர்மாபிவர்தநம் ।
கலயந்ஸந்முதா ஸாகமார்யதர்மோ விபாத்வயம் ॥

ஹரி என்னும் சங்கரரென்னும் பெயர்வாய்ந்த தேவர்களுடைய கருணையின் பலத்தால் சிறந்த தர்ம்மாபிவிருத்தியைச் சந்தோஷத்துடன் பண்டிதர்களின் மனத்திற்குத்திருப்தியுண்டாகுமாறு விருத்திசெய்கிறதாயும் பிரஸித்திபெற்றதுமான இந்த ஆர்யதர்மமானது எப்பொழுதும் உலகில் விளங்கிக்கொண்டிருக்கும்.

நம் பத்திரிகைக்கு இதுவரை 11-ஆண்டு பூர்த்தியாய் இன்று முதல் 12-ஆவது வருஷம் ஆரம்பம்மாயிற்றென்பதை நம் பத்திரிகாபிமானிகள் பலருமறிந்த விஷயமே.

இம்மையிலும் மறுமையிலும் மானிடர்கள் சுகித்திருப்பதற்கு வேண்டிய ஸாதனங்களை வெளியிடவேண்டுமென்று இயற்கையில் கருணைகொண்ட ஈசுவரன் மஹரிஷி முதலான மஹான்களால் லோகக்ஷேமத்தைக் கருதியே சுருதி ஸ்மிருதி புராணம் முதலிய நூல்கள் யாவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. முற்பிறவியிற் செய்த தீவினையாலும் காமம் முதலிய தோஷங்களாலும் காலத்தின் கொடுமையாலும் சிலர் இவைகளை நம்பாமல் தோன்றியவாறு தீயநெறிகளில் செல்லுவார்கள். அவ்விதம் செல்வது தவறேயாகும் என்பதை யறிவிக்கவேண்டி

श्रुतिस्मृती ममैवाज्ञा यस्तामुल्लंघ्य वर्तते । आज्ञाच्छेदी मम द्वेषी

ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சேதீ மம த்வேஷீ

சுருதி ஸ்மிருதி இவ்விரண்டுகளும் என்னுடைய ஆக்ஞைகளே. இவைகளில் கூறப்பட்ட விதிவிலக்குகளை எவன் தாண்டிச் செல்லுகிறானோ அவன் என்னுடைய ஆக்ஞையை மீறினவனாவன். ஆகையால் எனக்கு அவன் சத்துரு ஆகிறான் என்று பகவான் சொல்லியிருக்கிறார். இக்கருத்தைக் கொண்டுதான் முன்னிருந்த பெரியோர்கள் யாவரும் எவ்விதக்கஷ்டம் நேர்ந்தாலும்சாஸ்திரியமான மார்க்கத்தை விட்டுமாறாமல்தர்மானுஷ்டானங்களைச்செய்து வந்தார்கள். அவ்விதம் அவர்கள் அனுஷ்டித்ததற்குக் காரணம் பகவானிடத்திலிருந்த பக்தியும் பரலோகத்தில் ஏற்படும் துக்கத்தில் பயமும் இயற்கையிலிருந்த ஆஸ்திக்யமும் தான் காரணம் அந்த சாஸ்திரங்களும் பகவானால் அறிவிக்கப்பட்ட அந்த ஆக்ஞையும் இன்னும் விளங்கிக்கொண்டிருக்கின்றன வென்பதை மறுக்க ஒருவராலுமியலாது. இவ்விதமிருக்க தற்காலத்திய சிலர் தங்களைச் சிறந்த மேதாவிகளாகத் தாங்களே கருதிக் கொண்டு

आत्मनः प्रतिभात्वासीदागमाच्च बलीयसी ।

ஆத்மநः ப்ரதிபாத்வாஸீதாகமாச்ச பலீயஸீ ।

தம் புத்தியே வேதத்தைக் காட்டிலும் சிறந்ததெனக் கருதுகிறார்கள் என்று ஒரு அறிஞர் கூறியுள்ளபடி சுருதி ஸ்மிருதிகளைக்காட்டிலும் தம் புத்தியே பெரிதென்று நினைத்து தமக்குத் தோன்றியதெல்லாம் மேலான தர்மமென்றும் இதை உலகில் நடைபெறச் செய்தால் கூடிய சீக்கிரம் நம்தேசம் முன்னேற்றமடைந்து க்ஷேமத்தைப்பெறும் என்றும் நினைத்து விதவாவிவாகம், ருதுமதிவிவாகம் தீண்டாமை யொழிப்பது கீழ் ஜாதியிலிருப்பவர்களை மேன் ஜாதிக்கு ஏற்றுதல் முதலான பல அதர்மங்களைச் செய்ய முன் வந்துவிட்டார்கள் அந்தோ இவ்வித அதர்மலதையை நம் தேசம் பூராவும் படராமல் தடுக்கவேண்டி நம் பத்திரிகை இதுவரையில் சாஸ்திரார்த்தங்களையே முக்கியமாய்க்கொண்டு மற்றொன்றையும் சிந்திக்காமல் பல தடவைகளில் பலவாறாக இவைகள் அசாஸ்திரீயம் தீயச்செயல் கூடாதென்ற மறுப்பையும்அவ்வக்காலங்களில்

அநுஷ்டிக்க வேண்டிய சில வைதிக கர்ம்மாக்களில்ஏற்படும் கால நியமங்களின் சந்தேகங்களையும் அகற்றிச் சரியான சமயத்தைப் போதிப்பதாலும் குறிப்பிட்ட காலம் தவறுமல் வெளிவந்துலாவுவதாலும்ஆஸ்திகர்களுக்குமிகுந்த சந்தோஷத்தைஉண்டுபண்ணிக் கொண்டு வருகிறதென்பதும் நம்நேயர்களறிந்த விஷயமே. இனியும் அவ்வக்காலங்களிலேற்படும் சாஸ்திர விரோதமான அதர்ம வாதங்களைக் கண்டித்து ஸநாதநதர்மங்களைப் போதிப்பதையே முக்யநோக்கமாகக்கொண்ட இப்பத்திரிகை இக்காலத்திற்கு மிகவும் ஆவசியகமென்று ஆஸ்திகர்களுள் எவர்தான் கருதார்.

நம் பத்திரிகாபிமானிகளில் பலர் இக்காலத்திற்கு தினசரிப் பதிப்பாகவாவது வாரமிருமுறையாகவாவதுநம்பத்திரிகை வெளிவரவேண்டியது மிகவும் முக்யமென்று ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்கள் ஸந்நிதானத்தில் விக்ஞாபனம் செய்து கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் மேம்மேலும் நம்பத்திரிகாபிமானிகள் விருத்தியாவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து பத்திரிகையை விருத்திசெய்தால் அவர்களுடைய பிரார்த்தனையும் கூடிய சீக்கிறம் தானுகவே பூர்த்தியாய் ஜனங்களுக்குச் சந்தோஷத்தையளிக்குமென்பதிலையமில்லை. ஆஸ்திகர்களான மஹாஜனங்கள் யாவருக்கும் நம் பத்திரிகையைத் தற்கால நிலமையிலிருந்தும், அபிவிருத்தி செய்யவேண்டுமென்று இயற்கையிலிருக்கும் உத்ஸாகத்தை மேம்மேலும் விருத்திசெய்து கூடிய சீக்கிரம் அவர்களின் கோரிக்கை பூர்த்தியாகும்படி அனுக்கிரகிக்கவேண்டுமாய் நாமும் பகவானுன உமாரமணனையும் ரமாரமணனையும் அநேக வந்தனங்களுடன் பன்முறை பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உபபத்திராதிபர்.

---

## ஹரிஹர அபேதம்.

கற்றறிந்த பெரியோர்களுக்கும், மஹான்களுக்கும், விவேக வைராக்யமுள்ளவர்களுக்கும், சிவன். விஷ்ணு, என்கிற பேதபுத்தியாவது, த்வேஷமாவது இருக்கக்காரணமில்லை. அப்படிக்கின்றி கடைத்தெருப் புராணத்தை மாத்திரம் கேட்டவர்களுக்கும், शतश्लोकेन पण्डित: ஶதஶ்லோ

𑌕𑍇𑌨 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 என்பதை வைத்துக்கொண்டு பண்டிதனுகத் தன்னை எண்ணிக்கொள்பவர்களுக்கும், अर्धव्युत्पत्तिरनर्थहेतुः 𑌅𑌰𑍍𑌧𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌨𑌰𑍍𑌥𑌹𑍇𑌤𑍁𑌃 என்பதுபோல் அரைகுறையாகப் படிப்புள்ளவர்களுக்கே சைவ வைணவத்துவேஷம் ஜனிக்கும், அம்மாதிரியுள்ளோர்கட்கு உண்மையுரைக்கவேண்டியே இதுவிஷயத்தில்எழுதலானேன்.

முன்பு துர்யோதனுதிகளால் சூதாட்டத்தில் தோல்வியடைந்த பாண்டவர்கள் காம்யகவனத்தில் பிராமணர்களோடும், முனிவர்களோடும், கிருஷ்ணனையே ஆபத்ஸஹாயனுப் பஜித்துக்கொண்டு காலங்கழித்து வருங்கால், ஓர் சமயம் அவர்கள் பக்திக்கு மலிந்தபகவான் பீஷ்மருடனும்,தன் பரிவாரத்துடனும் அவ்விடம் வந்து சேர்ந்தார். சந்திரனைக்கண்ட பாற்கடல் போல் பாண்டவர்கள் ஆராவாரித்துக் குதூஹலத்துடன், அர்க்ய, பாத்ய, ஆசமனீயாதிகளால், உபசரித்து வாயார வாழ்த்தி, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி நின்றுகொண்டிருக்கும் பொழுது, தருமபுத்திரர், ஹே கிருஷ்ண ! உன் மாயை அறிய முடியாதது, மீற முடியாதது. பந்துஹீனர்களான எங்களுக்குத் தாங்களே முக்ய பந்து. அறிவைக் கண்ணுகவுடைய (பிறவிக்குருடனுன திருதராஷ்டிரான்) என் பெரிய தகப்பன் புத்திரர்களுடன் இஷ்ட சித்தியை அடைந்தவனுக ஆகட்டும், பெரியோர் மனம் சந்தோஷப்படுவதே எங்கள் விருதம். தங்கள் அறியாத தொன்றுமில்லை. ஆகையால் எல்லாம் தங்கள்பொருப்பே என்று சொல்லி நிற்கும் பொழுது, ஸ்ரீ கிருஷ்ணன் பக்கத்திலிருக்கிற பீஷ்மரைப் பார்த்து பீஷ்மரே? தர்மிஷ்டராயும், வயது சென்றவராயுமுள்ள நீர் இருக்கும்போதே, தர்மசீலர்களாயும், பொறுமையில்லாதவர்களாயும், என்னிடம் அதிகம் பிரீதியுள்ளவர்களுமான இந்தப் பாண்டவர்கள் வனவாஸம் செய்து வருவது நியாயமா? என்று கேட்க, பீஷ்மர் ஹே பக்தவத்ஸல? உம்மையே நம்பினவர்களுக்கு வேறு கதியில்லை. எழ்மையுடன் அதிக பக்திசெய்பவர்களுக்கு ஸாயுஜ்யத்தையும், தனிகராயிருந்தும் பக்தியில்லாதவர்களுக்கு நரகத்தையும் அளிக்கிறீர். உம்மையே சரணமாகக் கொண்ட இவர்களைக் காப்பாற்றுவது உம்முடைய கடமையே என்று சொன்னுர்.

அதன் பிறகு ஸ்ரீ கிருஷ்ணனே காம்யகவனத்தில் பாண்டவர்களுக்கு அநேகமாயிரம் தபோதனர்முன்னிலையில்

धर्म एव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः ।

𑌧𑌰𑍍𑌮 𑌏𑌵 𑌹𑌤𑍋 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।

என்கிற கருத்துக்கொண்ட அநேக தர்மங்களை உபதேசித்தார். பிறகு பீஷ்மரையும் மிகுந்த தர்மங்களை உபதேசிக்கச் சொன்னுர். இந்த தர்மங்களையே "சேஷ தர்ம" மென்று கூறுகிறது. இதில் பல தானங்களுடையவும், க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள் விருதங்கள் முக்திகள் முதலானவைகளுடைய மஹிமைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள்

இப்பொழுது எழுதுவதாக எடுத்துக்கொண்ட விஷயமானது "ஹரிஹர அபேதம்" என்ற நாற்பத்தி நான்காம் அத்தியாயத்தின் சுருக்கம். இதை பீஷ்மர், தர்மபுத்திரருக்குக் கீழ்வருமாறு சொல்லுகிறார்.

தர்மபுத்திரரே? தேவதேவனான ஜகன்னாதன் சிவமூர்த்தியாய் எப்படித் தோன்றினார்? எவ்விதம் பிராமணர்கள் பூஜிக்கின்றனர்? யார் யார் அவ்விதம் உபாஸித்துப்பயனடைந்தனர். அப்பூஜையின் பலமென்ன இது முதலான கேள்விகளுக்கு சமாதானம் சொல்லுகிறேன் கேளும். மும்மூர்த்திகளுக்கும் கிரியாபேதத்தால் நாம பேதமே தவிர, வஸ்து வேறல்ல பரப்பிர்ம்மத்துக்கு உபாதியேற்படும்பொழுது, பிர்மம் தனக்கு வச்யமான மாயையினிடமுள்ள, ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்கிற முக்ய குணங்களைக் கொண்டு முறையே விஷ்ணு, பிர்மா, ருத்திரன் என்கிற பெயர்களை அடைகிறது. எதனிடம் இப்பிரபஞ்சம் தோன்றி, நின்று லயமடைகின்றதோ! அவ்வித சச்சிதானந்த ஸ்வரூபமாயுள்ள வஸ்துவைக் காட்டிலும் வேறான தெல்லாம் மாயையின் கார்யமே, அத்தகைய வஸ்துவைத் தான் பிர்ம்மாதி தேவர்களாயும் இந்திராதி திக்பாலகர்களாயும் மற்றுமுள்ள சராசராத்மகமான ஸகல வஸ்துவாகவும் ஜீவன் முக்தியடைந்த மஹான்கள் அறிவார்கள் இதைப்பற்றி ஓர் பழைய கதையை (இதிஹாஸம்) ச்சொல்லுகிறேன்.

முன் கிருதயுகத்தில் ஸுசாந்தன் எனும் மறையோன். இந்திரிய நிக்ரஹம் பொறுமை, வீண் பேச்சில்லாமை, தியானம் முதலானவையுடனும், வேதம், சாஸ்திரம், வேதாந்தம் இவைகளில் திறமையுடனும், இல்லறவாழ்க்கையில் எல்லா விருப்பங்களையும் அனுபவித்து வீடடைவதில் ஆசையுள்ளவராக இருந்தார். அவ்வமயம் "பிர்ம்மதத்தன்" என்கிற ராஜா கிஷ்கிந்தா ராஜ்யத்தை ஆண்டு வந்தான். இந்த அரசே தான் வஸிக்கத் தகுந்ததெனத் தீர்மானித்து, கிஷ்கிந்தா நகரிலுள்ள பம்பா ஸரஸ்ஸில் நீராடி பம்பாநாதனான விருபாக்ஷனை அர்ச்சித்துத் தவம்புரிந்து வந்தார்.. சில காலம் காய் கிழங்குகளினாலும் சில ஸமயம் இலை, சருகு, பழம் முதலானவைகளினாலும் ஜீவித்துப் பசி, தாகம், சீதோஷ்ணம், ராகத்வேஷம், முதலானவைகளை ஒழித்து ஆத்மாராமனாய் இருந்து வருங்கால் தர்மசீலனெனும் ஓர் சூத்திரன் ஸத்ஸங்கத்தில் பற்றுதலுடனும் விருபாக்ஷதேவன் தர்சனத்துக்காக வேதியர்களுக்கு சுச்ருஷை செய்து கொண்டு வந்தான். ஸுசாந்தனுக்கும் வேண்டிய பணிவிடை செய்து ஆகாரத்தையும் விட்டு அந்தப் பம்பா ஸரஸ்ஸின் கரையிலேயே நூறு வருஷம் வஸித்து வந்தான்.

இப்பால் ஸுசாந்தனுடைய தபஸ்ஸால் ஸந்தோஷமடைந்த பூதநாதன் பிரத்தியக்ஷமாய்த் தோன்றி ஸுசாந்தனே உனக்கு வேண்டிய வரத்தைக்கேள். உன் தபஸினால் களி கூர்ந்தேன் என்று சொல்லவும், பிராம்மணன் ஆச்சரியமும், சந்தோஷமும் அடைந்து அடிக்கடி ஸாஷ்

டாங்கமாய் நமஸ்கரித்து, சிவ சம்போ நீலகண்டா? என்று போற்றி நிற்கும்போது பரமசிவன் பக்கத்தில் பக்தியுடன் இருக்கிற சூத்திரனையும் "வரத்தைக் கேள்" என்று சொல்லி உதய பர்வதத்தில் பிரகாசிக்கும் கதிரவனைப்போல் விளங்கினர்.

அப்பொழுது ஸுசாந்தன்நான்காம்வர்ணத்திலுதித்த இந்த தர்மசீலனுக்கும், எனக்கும் சிரேயஸ்ஸான மோக்ஷத்தைக் கொடுங்கள்" என்று உமாமகேச்வரனைப் பிரார்த்தித்தான். தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழலைக் கொடுக்கும் ஸத்விருக்ஷங்கள் போன்ற,ஸாதுக்கள் தங்களுக்கு தீங்கிழைப்பவர்களுக்குமே நன்மையைச் செய்வார்கள். ஸாதுவாயும் உபகாரம் புரிந்தவனையுமுள்ள விஷயத்தில் அனுகூலம்புரிய ஆக்ஷேபமென்ன? ஆகையால் சூத்திரனுக்கு முதலிலும் பிறகு தனக்கும் முக்தியை வேண்டினர் ஸுசாந்தர்.

இவ்வார்த்தையைக் கேட்ட நீலகண்டன் புன்சிறிப்புடன் "உமக்கு இந்தஜன்மத்தில்வேண்டியதை அளிக்கின்றேன். இச்சூத்திரனுக்குஅடுத்த ஜன்மத்தில் ஆகட்டும்" என்க ஸுசாந்தன் வேண்டாம் வேண்டாம் எனக்கும் மறு ஜன்மத்திலேயே கிடைக்கட்டும். எனக்குத் தோழனும் சுச்ருஷை செய்தவனுகவுமுள்ள இவனை விட்டு நான் மாத்திரம் எப்படித் தங்கள் உலகில் வசிப்பேன் என்று சொல்லி சரணங்களில் நமஸ்கரித்து மௌனமடைந்தார்.

அதன் பிறகு முக்கண்ணன் அப்படியே உண்டாகட்டும். இந்த சூத்திரன மறு ஜன்மத்தில் உமக்கு சத்ருபாவத்தை யடையப்போகிறான் அப்பொழுது நான்உமக்கு தர்சனத்தைக்கொடுத்தும்,அவனை வதம் செய்தும் இருவருக்கும் மோக்ஷம்குடுப்பேன் என்று சொல்லஸுசாந்தன் வியப்படைந்து பூதேசனே இந்த சூத்திரன் எப்படி விரோதியாவான் அதை சொல்லவேண்டும் என வேண்ட ஈச்வரன்,

मतङ्गो नाम विप्रर्षिर्भविताऽसि द्विजोत्तम ।
इन्द्रपुत्रोऽप्ययं शूद्रो वालीति ख्यातिमेष्यति ॥

மதங்கோ நாம விப்ரர்ஷிர்பவிதாஸி த்விஜோத்தம ।
இந்த்ரபுத்ரோஹ்யயம் ஶூத்ரோ வாலீதி க்யாதிமேஷ்யதி ॥

நீர் மறு ஜன்மத்தில் மதங்கர் என்கிற பிராம்மண ரிஷியாகவும் இந்திர புத்திரனை இந்த சூத்திரன் வாலி என்கிற வானரனுகவும் உண்டாகப்போகிறீர்கள் எனவும் ஸுசாந்தன் பிரபுவே தாங்கள் அவ்வமயம் எந்த ரூபமாய்த் தர்சனம்கொடுக்கப் போகிறீர்கள் என்று பிரார்த்தித்தார். அதற்கு பரமசிவன்

रामो दाशरथिर्भूत्वा जटावल्कलवान्रणे ।
किष्किन्धाया बहिर्देशे वालिनं हेममालिनम् ॥
हनिष्यामि शरेणाशु विदूरे दृष्टिगोचरे ।
इत्युक्त्वा सहसा देवो देवैस्सह तिरोदधे ॥

ராமோ தாஶரதிர்பூத்வா ஜடாவல்கலவாந்ரணே ।
கிஷ்கிந்தாயா பஹிர்தேஶே வாலிநம் ஹேமமாலிநம் ॥
ஹநிஷ்யாமி ஶரேணாஶு விதூரே த்ருஷ்டிகோசரே ।
இத்யுக்த்வா ஸஹஸா தேவோ தேவைஸ்ஸஹ திரோததே ॥

நானே தசரதர் குமாரனான ராமனாய் அவதரித்துச் சடை மறைவுருவியுடன் யுத்தத்தில் கிஷ்கிந்தா நகரத்துக்கு வெளிப்பிரதேசத்தில் தங்கமாலை தரித்த வாலியை வதம் செய்யப்போகிறேன் என்றும் கூறிமறைந்தார்.

இப்படிக் கொஞ்சகாலம் சென்றபின் விப்ரனும், சூத்ரனும், மண்ணுலகை நீத்து விண்ணுலகேகி, ஸத்கர்மபலங்களான தேவலோக சுகங்களையுண்டு கர்மவீர்யங்கழிய மறுபடி தபோபலமுள்ளவர்களாய் மீண்டும் அதே கிஷ்கிந்தாநகரத்துக்குச் சமீபத்திலேயே மதங்கரிஷியாய் ஸுசாந்தனும், வாலியாய் தர்மசீலனும் பிறந்தார்கள். உக்ரமாகத்தவம் புரியும் மதங்கருக்குவாலீ, துந்துபி எனும் அசுரதேகத்தை ஆச்ரமத்தில் எறிந்து தீங்கிழைத்தான் கிஷ்கிந்தாராஜ்யத்துக்கும் அதிபதியாயிருந்தான், மதங்கர் தன்னுடைய ஆச்ரமத்துக்கு வாலீவராவண்ணம் சாபம் கொடுத்துவிட்டுத் தவம்புரிந்து வருங்கால் ராமன் பித்ருவாக்ய பரிபாலனத்திற்காக அங்கு வந்தார் மதங்கர் கண்டுகளித்தார் ராமன் வாலியை வதைத்தார். தர்சனத்தால் மதங்கரும் வதத்தால் வாலியும் பரிசுத்தர்களாகி சிவலோகம் சென்று சிவனாலும் கௌரவிக்கப்பெற்று தன்னுடன் கோடிவம்சத்துடன் விஷ்ணுவுலகம் சென்றனர்.

तस्माच्छिवार्चनं नित्यं भुक्तिमुक्तिफलप्रदम् ।
हरिशङ्करयोर्भेदो नास्ति नास्ति जनाधिप ॥

தஸ்மாச்சிவார்சநம் நித்யம் புக்திமுக்திபலப்ரதம் ।
ஹரிஶங்கரயோர்பேதோ நாஸ்தி நாஸ்தி ஜநாதிப ॥

ஆகையால் புக்தி முக்திகளைக் கொடுக்கிற சிவபூஜை நித்யமாய் செய்யவேண்டும் சிவ விஷ்ணுக்களுள் பேதமென்பதே கிடையாது; என்று பீஷ்மர், தர்மபுத்திரருக்கு உபதேசித்தார். சுபம்!

வீ. உமாமகேச்வரசாஸ்திரீ,
காட்டுமன்னார்கோவில்

# தற்கால மாணவர்களின் நிலை.

தற்காலம் ஆங்கிலக்கல்லூரிகளில் கல்விபயின்றுவரும் பிராமணமாணவர்களின் நிலைமை மிக்க பரிதாபகரமாயிருக்கின்றது. ஆங்கிலக் கல்விக்குத் தற்காலம் இருக்கும் மதிப்பை உத்தேசித்தும், அதன் உதவியால் ஏதேனும் ஜீவனோபாயத்திற்கு வழிதேடலாம்என நம்பியும் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை ஆங்கில கலாசாலைகளுக்கே அனுப்பிவிடுகின்றனர். ஆதலால் அவர்கள் வேதாத்யயனம் செய்வதற்கு ஹேதுவங்கியில் போய்விடுகிறது. அஃதில்லாவிடினும். பிராமணீயத்திற்கு அத்யாவச்யமான ருத்ர சமகபுருஷசூக்தாதிகள் கற்பதற்குக்கூட அவர்களுக்கு சௌகரியமேற்படுவதில்லையென்று சொல்கின்றனர். அதுதான் போகட்டும். தங்களுடைய நித்யகர்மானுஷ்டானங்களையாவது சரியாகச் செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. அநேகருக்கு ஸந்தியாவந்தனமே தெரியாது. தெரிந்த சிலரும் ஒழுங்காகச் செய்வது கிடையாது, ஏன் செய்வதில்லை என்று கேட்டால், "என்ன ஸார்! டைமே இருக்கிறதில்லை. உட்கார்ந்தால் பத்து நிமிஷம் வேஸ்ட் (வீண்)ஆய்விடுகின்றது. பூணூல் போட்ட நாலாவது நாளன்றே எல்லாவற்றையும்புரோஹிதரிடம் ஒப்படைத்துவிட்டேன்' என்று வேடிக்கையாக பதில் சொல்லிவிடுகின்றனர்.

அந்தோ! என்ன பரிதாபம்! பிராமணர்களின் தற்கால நிலையைபிறசமூகத்தினர்கண்டு எளனம் செய்யத்தக்கவாறு இருக்கிறது நிலைமை மேற்சொன்னவாறு இருக்காவிட்டால் நம் பிராமணசமூகம் பிற்காலம் எப்பேற்பட்ட ஸ்திதிக்குவந்து விடும் என்று ஒவ்வொரு உண்மை பிராமணனும் யோஜித்துப்பார்க்கவேண்டும். இந்நிலைமையைப் போக்குவதற்கு பெற்றோர்கள் அனைவரும் முயற்சிக்கவேண்டும். தங்கள் தனயர்களை, தினந்தோறும் காலந்தவறாமல் நித்ய கர்மானுஷ்டானங்களை அநுஷ்டிக்கும்படி நயமாகவும் பயமாகவும் வற்புறுத்தல் வேண்டும், அதனால் ஏற்படும் ஸாதகபாதகங்களைப் போதிக்கவேண்டும். அத்துடன் ஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்கள் சென்ற சஞ்சிகையில் கூறியுள்ளப்பிரகாரம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அத்யயன வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எல்லாப் பிராமண மாணவர்களும் அதில் சேர்ந்துகற்குமாறுவற்புறுத்தப்பட வேண்டும். முதல் முதலாக ஸந்தியையை அக்ஷரப்பிழையன்னியில் சொல்லும்படி போதித்துப்பிறகு ருத்ரசமகபுருஷசூக்தங்களைவரிசையாகப்போதிக்கலாம். இதைக்கண்ணுறும் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென்று தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தி. சு. ராமகிருஷ்ணன்.

ஒரு மாணவன்.

# ஆன்ஹிகக்ரமம்.

நமதுசாஸ்திரங்களில் கூறப்பட்ட விதிகளுக்கு மூவ்வகைப்பயனுண்டு. ஒன்று இப்போதே காணும் பலம், மற்றொன்று மறுமையில் காண்பதாம் இன்னுமொன்று இம்மையிலும் மறுமையிலும் காண்பதாம். இதே திருஷ்டபலம் அதிருஷ்டபலம் திருஷ்டாதிருஷ்ட பலமெனப்படுகிறது. ஆசாரமனைத்தும் ஏறக்குறைய திருஷ்டாதிருஷ்ட பலமேயாகும். கீழ் சொன்ன சௌசத்தின் அதிருஷ்டபல மொருபாலிருக்க, திருஷ்டபலத்தின் குணத்தை என்னென்றுபோற்றலாம்? குளிர்தேசத்தவர்ஆசாரத்தை யுக்தாயுக்தம் பாராமல் நம்மவரில் சிலர் கொள்வதைக்காண மிக அவமானமாயிருக்கிறது. அபானன் என்ற வாயுவியானனதுஸஹாயத்தைக்கொண்டு மலங்களைக் கழிக்கிறது. அது காலே துர்நாற்றம் நிறைந்தவாயு உள்ளும் புறமும் பரவக்காண்கிறோம். மலச்சிக்கலுள்ளவர் வாய் நாறுவதையும் அபானவாயுவின் துர்நாற்றத்தையும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். ஆதலால் அவ்வாயு ஸம்பந்தங்கூட இல்லாமல் மண்ணாலும் ஜலத்தாலும் கழுவுவது அறிவுடைமையன்றோ? சிறுநீர் இறங்கிய பிறகு மிருகங்களைப்போல் சுத்திசெய்யாது செல்பவன் எவ்வகையில் அவைகளைவிட மேலாவான்? உஷ்ணநீர் சென்ற பிறகு அவ்வவயவத்தையும் கைகால்களையும் கழுவி நாலுமுறை வாயைக் கொப்பளிக்கவேண்டும் என்ற விதி எவ்வளவு சூக்ஷ்மமாக தேஹாரோக்யத்தில் அக்கரை காட்டுகிறது. அடிக்கடி கால் கழுவுவதால் தலையிலுள்ள உஷ்ணம் கழிகிறது. வாயைக்கொப்பளிப்பதால் தந்த ரோகம் நீங்குகிறது. குடிநீரில் எவ்வளவு ஊக்கம் கொண்டனர்?

## கண்டூஷ ஆசமந தந்த தாவனம்,

கைகால் குதங்களுக்கு மண்ஜல சௌசமான பிறகு கச்சமவிழ்ந்திருந்தால் கட்டிச் சிகையை முடிந்து வாய்கொப்பளிக்கவேண்டும். இவ்வசுத்த ஜலத்தைக் கரையிலேயே விட்டு அதையும் அலம்ப வேண்டும். வலது புரத்தில் தேவரிருப்பதால் உட்கார்ந்து இடப்புரத்திலே கொப்பளிக்க வேண்டும். ஜலவிஸர்ஜநத்திற்குப் பிறகு நாலு முறையும் மலத்திற்குப் பிறகு எட்டும்,போஜநதந்ததாவனங்களுக்குப் பிறகு பதினாறு பதினெட்டு முறைகளும் கண்டூஷம் விதிக்கப்பட்டுளது. அவரவர் ஸம்ப்ரதாயப்படி உள்ளங்கையால் மும்முறை ஜலத்தைக்குடித்து இந்திரியங்களைத் தொடுவது ஆசமனீயமாம். இதற்கு மந்திரம் அச்யுதாநந்த கோவிந்த என்பவைகளுடன் (சதுர்த்யந்தம்) நமஸ்காரத்தைச்சேர்த்தும் மூன்று வ்யாஹ்ருதிகளைக்கூறியும், ருக்யஜுஸ்ஸாம வேதங்களுடன் ஸ்வாஹாகாரத்தைச் சேர்த்தும் சொல்லுகிறார்கள். கால்மேல் கால்போடாமல் பதிய உட்காராமலும் உட்கார்ந்து இரண்டு முழங்கால்களுக்குள் இரண்டு முழங்கைகளும்

வரும்படி உட்கார்ந்து உலர்ந்த வஸ்திரமணிந்துஉடலைப்போர்த்துக்கொள்
ளாமல், மேல்துணியை யக்ஞோபவீதம்போல் போட்டுக்கொண்டு கிழக்கி
லாவது வடக்கிலாவது ஆசமநம் செய்யவேண்டும். உள்ளங்கையில் தங்கும்
ஜலத்தில் ஓர் உளுந்து முழுக வேண்டும். அந்தக கணைக்குத்தானே வரு
வதற்குதான்போல் சுண்டுவிரலையும் கட்டைவிரலையும் கீழே தாழ்த்தும்படி
விதி கூறுகிறது. உள்ளங்கை அடிமூலமாகக் குடிக்கும்படிவிதி. அது பிர்
மதீர்த்தமாம். முழங்கால் மறையும்படி ஜலத்தில் நின்றுக்கொண்டும் செய்
யலாம், ஆசமனஜலம் ஹிருதயம்வரை உள் செல்லத்தக்கதாயிருக்கவேண்
டும் உப்பு உஷ்ணம் நுரை வாஸனை, நாற்றம், கலங்கல் முதலியவைகளில்
லாமலிருக்கவேண்டும். ஒருவர் செய்த மீதியுமுதவாது. இடதுகையாலெ
டுத்ததும் நகம்பட்டதும் கூடாது. உத்தரிணியோ கொட்டங்கச்சி சொ
ரைக்காயால்செய்த பாத்திரங்களையோ கொண்டு இடதுகையால் எடுத்துச்
செய்யலாம். எப்போதும் இரண்டுமுறை செய்யவேண்டும். ஒவ்வொரு
தடவையும் இரண்டுமுறை வாயைத் துடைக்கவேண்டும். மும்முறை ஜல
மருந்துவதால் பிரும்ம விஷ்ணு ருத்ரர்களும் ருக்யஜுஸ்ஸாமங்களும் திரு
ப்தியடைகின்றனர். துடைப்பதால் கங்காயமுனைகள் ஸந்தோஷிக்கின்ற
ன. கண்களால் சந்திர சூரியர்களும் மூக்கால் அச்விணிகளும் காதால்
அக்னிவாயுக்களும் மார்பால் ஸகல தேவர்களும் சிரஸால் புருஷோத்த
மனும் ஆநந்தமடைகின்றனர். கட்டவிரலால் முகத்தையும் கட்டவிரல்
ஆள்காட்டி இரண்டாலும் கண்களையும் கட்டவிரல் மூன்றும் விரல்களால்
மூக்குகளையும் கட்டைவிரல் சுண்டுவிரல்களால் காதுகளையும் எல்லாவிரல்
களாலும் மார்பையும் தலையையும் தொடவேண்டும். ஒவ்வொரு ஸமயத்தி
லும் ஜலத்தைத் தொட்டுக்கொள்ள வேண்டும். ப்ரம்மயக்ஞப்ரகாணத்
தில் யஜுர்வேதம் கூறிய முறையே இதற்கு ப்ரமாணமாம்.

அதிகாலையிலும் மற்ற வேளைகளிலும் சுத்தமான சீத ஜலத்தைக்
கொஞ்சம் கொஞ்சமாக அருந்துவது உஷ்ண தேசத்தில் வஸிக்கும்
நமக்கு உள்ளேயுள்ள மலங்களைக் கழித்து சீத தேசத்திலுள்ளோருக்
கு உஷ்ணமான பானம் போல் ஒருவித உத்ஸாஹத்தையும் சுறுசுறுப்
பையுமளிப்பதாம். கர்மேந்திரியமான கண் காது முதலியவைகளுக்கு,
ஈரக்கையுடன் தொடுதலும் அங்ஙனமே சக்தியளிப்பதாம். மூர்ச்சை
யால் களைத்தோருக்கு சைத்யோபசாரம் செய்யக்காண்கிறோம். மலச்சிக்
கலையறுக்கும் இது மஹௌஷதியாம்.

இரவில் சேர்ந்த அசுத்திகளையகற்றப் பல் துலக்கலவசியமாம்.
அதற்கு எல்லாவற்றையும் விட குச்சிகளே மேலானது. மரங்களும் செடி
கொடிகளும் பிராணிகளே யாதலால், அதிலிருந்து குச்சியை ஒடிக்கும்
போது அவைகளுக்குத் துன்பம் அளிக்கிறோம். ஆதலால் அதை அக்
குற்றத்தை மன்னித்துத் தனக்கு ஆயுஸ். பலம், யசஸ், வர்ச்சஸ், ஸந்
ததி, பசுபொருள் வேதாந்த அறிவு புத்தி, இவைகளைக் கொடுக்கும்

படி வேண்டவேண்டும். அக்குச்சி கட்டை விரல் பெருமனும் பனிரண்டங்குல நீளமுமுள்ளதாயிருக்கவேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாக உட்கார்ந்து பல் துலக்கவேண்டும். பொதுவாக யாகத்திற்கு உதவாதஎல்லாப்பாலுள்ள மரங்களும் ஏற்றதாகும். கருங்காலி கடம்பை, புங்கு, மூங்கில் வெள்ளைமந்தாரை, நாகை, வேம்பு, நாயுருவி, எருக்கு, அத்தி, மா, புன்னை, வாகை, ஆல், வேல், இலந்தை, இலுப்பை, பலா, சொத்தக்களா இவைகள் மிகச் சிலாக்யமாம்.

இலவு, அரசு, பாலை, புரசு, வன்னி, பருத்தி, நாணல், பவழமல்லி, புளியங்குச்சி இவைகளால் பல் தேய்க்கக்கூடாது. அமாவாஸ்யை முதலிய விருத தினங்களில் குச்சிகளால் தேய்க்கக்கூடாது. செங்கல் மணல் கல்களாலுங் கூடாது. வைத்திய நூல் கூறும் கரிசிராங்கண்ணிமாவிலை முதலியவைகளால் துவக்கும்போது மோதிரவிரல் கட்டைவிரல் இவைகளையே உபயோகிக்கவேண்டும்.

தூங்கும்போது உண்ட உணவை ஜீர்ணம் செய்ய ஓர் கருவி ஓயாது உள்ளே வேலை செய்கிறது. அதற்கு ஐந்து பிராணன்களும் ஸஹாயம் செய்கின்றன. களத்திலிருந்து காற்று பதரை அப்புறப்படுத்துவது போல் மலத்தில் ஏகதேசத்தை அந்தந்தத் துவாரங்களிலும் ஒதுக்குவது ஓர் வாயு. அம்மலங்கள் நாக்கிலும் பற்கள் சந்துகளிலும் தங்கி துஷ்கிருமிகளை உண்டுபண்ணுகின்றன. அதன் மூலமாகத் தந்தநோய் பிறக்கிறது. ஆதலால் நன்கு முகசுத்தி செய்த பிறகே உமிழ் நீர் விழுங்கவேண்டும். நாகரிகமெனப் படுக்கையிலேயே சென்று குடலைக்கெடுத்துக் காபி முதலியவை அருந்தினால் கோழை மலம் முதலிய உள்ளேசென்று உடலைக் கெடுத்துவிடுகின்றன, முதல் வேலை தந்த சுத்தியானால்எந்த வியாதியும் அருகே அணுகாது. அன்றியும் வாதம் பித்தம் ச்லேஷ்மம் என்ற மூன்றே பெரும்பாலும் உடலின் முக்யப்பொருளாயிருந்து சரீரஉஷ்ண சீதளத்தையும் வியாதியில்லாமையையும் காட்டுங்கருவியாயிருக்கிறது. ஓர் குறித்த அளவிற்கு மேல் இவையிருந்தாலும் வியாதி குறைந்தாலும் வியாதி பல் குச்சிகளால் துலக்கி நாக்கை சுத்தஞ் செய்யும் போது அதிகமான பித்த ச்லேஷ்மங்கள் வெளியே வந்து விடும். குச்சிகள் மிக மெதுவாக ஈருக்கருகிலுள்ள குப்பைகளைக் களைந்து நிர்மலமாக்குகின்றன. பல்லின் வேறுகள் துஷ்கிருமிகளால் பாழ் பண்ணப்படாமலிருக்கும். எவ்வகையான தந்த ரோகமும் வாரா. சாம்பல் செங்கல் பொடிகளால் கிராமத்தாரும், சீமைச்சுண்ணம்பு அதைக் கலந்ததிரவம் முதலியவைகளால் நகரத்தாரும் ஈரை ஒடுக்கி வேரைக் களைந்து பொய்ப்பல்லையணிய நேருகிறது. வீணகப் பல் துவக்குவதற்குக் கூட அன்ய நாட்டிற்குப்பணமளித்தும், பல்லை இழந்தும் பணங்கொடுத்தும் பொய் பல்லைப் பெறுவதேன்? முன்னோர்காட்டிய செலவில்லாவழியைப் பிடித்துத்தேஹாரோக்யத்தை

யுமடைந்து எளிதில்சாஸ்திராசாரத்தையும் செய்து நற்பயனைப்பெறலாகாதோ? இதைவிட பரலோகத்திற்கு மாத்திரமில்லாமல் இவ்வுலகவாழ்க்கைக்கும்தர்மநூல்எவ்வளவுபயன்படுகிறதென்பதற்கு வேறுஸாக்ஷிவேண்டுமோ?

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

# மஹோதய புண்ணியகாலம்.

சென்றமார்கழிமீ 15உ வெளிவந்த ஆர்யதர்மம் 47வதுஸஞ்சிகையில் இது விஷயமாய், ஸங்கிரஹவசனத்திற் கூறிய'ஸௌம்ய வாரே' என்ற ஸாமாநாதிகரண்ய பலத்தோடுசேர்ந்த சிஷ்டாசார பலத்தால் திங்களன்று அமாதியோகத்திற்றான் மஹோதய புண்யகாலமென்று கூறினோம். சிஷ்டாசாரத்தைப் பிரமாணமாகக் காட்டக்கூடாது என்று கேட்டவர்களுக்கு இந்த நிர்ணயம் ஸமாதானமாகுமா? என்றால், யாம் சிஷ்டாசாரத்தை மாத்திரம் பிரமாணமாகக் காட்டவில்லை. ஸாமாநாதிகரண்யத்தைக் காட்டிய ஸங்கிரஹவசனத்தையும் பிரமாணமாகக்காட்டியிருக்கிறோம். ஆயினும் அதுவும் போதாது. அதற்கு வேறு விதமாக உபபத்தி செய்துவிடலாம். ஸ்பஷ்டமாக வேறு 'இந்து வாரேண' என்பதாதியான வசனமிருந்தால் அதைக்காட்டவேண்டுமேயல்லது யுக்திவாதம் பேசுவது சரியல்லவென்றால் கூறுவாம். காசியில் சௌக்காம்பாஸம்ஸ்கிருத ஸீரியஸ்ஸில் 1923ஞு ஜூலைமீ 307 நெ. ஸஞ்சிகையாக அச்சிடப்பட்ட நிர்ணயஸிந்துவென்ற கமலாகர பாட்டராசாரியாரவர்களியற்றிய நிபந்தனக் கிரந்தத்தின் 754 எழுநூற்றி ஐம்பத்தி நான்காவது பக்கத்தில் 21 22வது வரிகளில் காணப்படுகின்ற நிர்ணயஸிந்துவிற்கு கிருஷ்ணம்பட்டரியற்றிய வியாக்கியானத்தில்

पातस्यान्ते पूर्वभागेत्वमायाः श्रोणामध्ये भास्करस्योदये च ।
भानोर्वारे ह्यर्धमित्याहुरार्याश्चेन्दोर्वारे तन्महत्पूर्वमाहुः ॥

𑌪𑌾𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑍇𑌤𑍍𑌵𑌮𑌾𑌯𑌾𑌃 𑌶𑍍𑌰𑍋𑌣𑌾𑌮𑌧𑍍𑌯𑍇
𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌸𑍍𑌯𑍋𑌦𑌯𑍇 𑌚 । 𑌭𑌾𑌨𑍋𑌰𑍍𑌵𑌾𑌰𑍇 𑌹𑍍𑌯𑌰𑍍𑌧𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁-
𑌰𑌾𑌰𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍋𑌰𑍍𑌵𑌾𑌰𑍇 𑌤𑌨𑍍𑌮𑌹𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌾𑌹𑍁𑌃 ॥

என்ற 'தர்மப்பிரவிருத்தி' யென்னும் நிபந்தனத்தில் காட்டியதாக கூறப்படுகின்ற வசனத்தில் ஸ்பஷ்டமாய் 'இந்தோர் வாரே' என்று கூறப்படுகின்றது. ஆனால் இங்கு காட்டிய இவ்வசனம் ஸங்கிரக வசனத்தையே

வேறு விதமாக எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. அதில் பாடத்தை மாற்றிவிட்டார்களோ என்னவோ என்று இதிலும் சங்கிக்கலாம். அத ற்கு ஸமாதானம் எவராலும் கூறமுடியாது. எந்தவிடத்தில் காட்டினாலும் அங்கேயும் இந்த சங்கை வரலாம். ஆகவே அதற்கு ஸமாதானம் கிடை ப்பது அரிது. இங்கு ஒன்று கவனிக்கவேண்டும். அப்பா தீக்ஷிதரவர்க ளியற்றிய ஆசாரஸார நவநீதமென்ற கிரந்தம் நம் நாட்டில் நீண்டகாலமாய் அனுஷ்டாபகக் கிரந்தமாகயிருந்து, அதிலுள்ள 'புதவாரேண' என்ற பத மும் 'சாந்திரி:' என்ற பதமும், "சாந்திரி: —புத:" என்ற அதன் வியாக்கி யானமும் இவ்வளவு ஸ்பஷ்டமாககாட்டியிருக்கும்போது, தற்காலம் பெரி யோர்களுடைய கிரஹங்களில் காணப்படும் 150 வருஷங்களுக்குள்ள பஞ் சாங்கங்களில் ஒரு வருஷத்திலாவது புதன் கிழமையில் மஹோதய புண்ய காலம் போடாமலும், திங்கட்கிழமையிலேயே அதைப்போட்டு வருவதும் எப்படி வந்ததோ தெரியவில்லை. மோசத்தால் அவ்விதம் போடப்பட்ட தாக தீக்ஷிதரவர்கள் கூறியிருக்கிறார்களென்றால், இந்த வருஷத்திற்குப் பல நூற்றாண்டுகளாகப் பஞ்சாங்கம் போட்டு வந்த பண்டிதர்களனேகர் களுக்கு மோஹம் வந்ததாகவும், அனுஷ்டானத்தைத் தவராது செய்து வந்த நம்முன்னோர்களான பெரியோர்களும் அதனால் மோசம் போய்விட்டதாகவும் எவராலும் துணிந்து சொல்ல முடியாது. அவ் வளவு பெரியோர்களுக்கும் இந்தக் கிரந்தம் இவ்வளவு நாளாகக் கிடைக்காமல் எங்கு தூங்கி இருந்ததோ தெரியவில்லை. அதை வைத் துக்கொண்டிருந்தவர்களாவது அக்காலங்களில் வெளியிட்டு வியவஸ்தை செய்திருக்சலாம். அவர்களும் மயங்கிக் கிடந்து விட்ட காரணம்பற்றியே இந்த வருஷத்திற்குக் கீழ்ப்பட்டு நீண்டகாலமாக நம் முன்னோர்களெல் லாம் மோஹப்பட்டதாகவும். மோசம் போனதாகவும் கற்பிப்பது நன்று? அல்லது அவர்களுடைய அனுஷ்டானத்திற்கு ஏதாகிலும் மூலப் பிரமாண மிருக்குமென்று ஊகிப்பது நன்றுயென்பதை ஆஸ்திகர்கள் ஆராய்ந்து அறியவேண்டும். நம்முன்னோர்கள் தர்மானுஷ்டான விஷயத்தில் மோ சம் போனார்களென்று நாம் கூறுவது.

नास्माकं जननी तथोज्ज्वलकुला நாஸ்மாகம் ஜநநீ தயொஜ்ஜ்வலகுலா

டம்பன் கூறியது போலாகும். நமது தீக்ஷிதரவர்களும் நாளது வருஷம் முதல்' என்று கூறியிருப்பதால் இதற்கு முன் வெகு காலமாக சிஷ்டர்கள் அனுஷ்டித்து வந்தது திங்கங்கிழமையிற்றான் மஹோதய புண்ய கால மென்பது ஸ்பஷ்டமாகின்றது. அதற்குப் பிரமாணமாயிருந்தது தற்கா லம் விவாத விஷயமாயிருக்கும் பாரதாதி வசனங்கள்தான் என்பதும், இப் பொழுது நமது தீக்ஷிதரவர்கள் காண்பிவிக்கும் ஆசாரஸாரநவநீதம் காட் டிய பாடம் அவர்கள் பார்வையில் படவில்லையென்பதும் ஸ்பஷ்டமாகின் றது. ஆசாரஸார நவநீதமும், அது காட்டிய பாடபேதமும், வியாக்கியா

னமும் நம் முன்னோர்களுக்குப்புலப்பட்டிருக்குமேயாகில் அவர்கள் அதை விசாரத்திற்குக் கொண்டுவராமலும் ஒருவித நிச்சயம் செய்யாமலும் மயங்கிக் கிடப்பதற்கும், மோசம் போவதற்கும் காரணமே கிடையாது. அவை புலப்பட்டிருக்காது. அதுதான் அதற்குக் காரணமென்பதும் சரியாகத் தோன்றவில்லை. இத்தகைய கிரந்தம்பிரசுரமாயிருந்தும் அவர்களுக்குப்புலப்படாதது. அக்ஞானத்தாலா? வேறு காரணத்தாலா? அக்ஞானத்தாலென்பது பெரியோர்களிடம் கற்பிக்கத்தகாதது. வேறுகாரணமின்னதென்று ரூபிக்க முடியாதது பற்றி அதையும் கற்பிக்க முடியாது. ஒரு ஸமயம் அவர்கள் உபேக்ஷையாயிருந்திருப்பார்களோவென்றால், தர்மானுஷ்டானத்தில் இயற்கையாகவே சிரத்தைகொண்ட அவர்களிடம் அதுவும் கற்பிக்கத் தகாததே. பல நூற்றாண்டுகளாக ஒருவராவது இந்த ரகஸ்யத்தைக்கண்டுபிடிக்காமலும், மோஹப்பட்டும், மோசம் போயும் தவறிப்போயும், விழித்துக்கொள்ளாமலும் இருந்து விட்டதாக ஸாதிப்பது ஸாஹஸமேயாகும். தைத்தரீய சுருதியில் கூறியபடி சிஷ்டர்களே நீடித்தகாலமாய்க் கிடையாதென்பதுமப்படியே. ஆகையால் நமது தீக்ஷிதரவர்கள் கொள்கைப்படி ப்ராசீனர்கள் கொள்கையில்லை. அவர்கள் கொள்கைக்குப் பிரமாணமொன்று இருந்தே தீரவேண்டும். என்பதை நம்பி விவாதவிஷயமாயுள்ளவைகளை அதற்கு ஸ்பஷ்டப் பிரமாண வசனம் அகப்படும் வரை பிராசீனாசாரத்தையே இவ்வருஷத்திலும் யாவரும் கைக்கொள்ளவேண்டும்.

அன்றியும் சென்னையில் தி. ஸ்வாமிநாத சாஸ்திரிகளவர்களால் தமிழுரையுடன் 1922 ஞூத்தில் அச்சிடப்பட்ட காலவிதானமென்னும் முகூர்த்தக் கிரந்தத்தில் 131 வது பக்கத்தில்

पुष्ये माघेष्वमावास्या पातयोः श्रवणे यदि ।
सोमे वा सौम्यवारे च महोदय इति स्मृतः ॥
माघे इन्दुक्षये काम्ये अर्के वारेऽर्धएव सः ॥

புஷ்யே மாகேஷ்வமாவாஸ்யா பாதயோ: ச்ரவணே யதி ।
ஸோமே வா ஸௌம்யவாரே ச மஹோதய இதி ஸ்ம்ருத: ॥
மாகே இந்துக்ஷயே காம்யே அர்க்கே வாரேऽர்த்தஏவ ஸ: ॥

என்ற வசனத்தில் ஸ்பஷ்டமாய் ஸோமவாரத்தில் அமாதிகள் சேர்ந்தால் மஹோதயமென்று கூறப்படுகின்றது இதில் வேறு எவ்வித சங்கையும் செய்ய இடமில்லை. இதனால் திங்கட்கிழமையில் மஹோதய யோகம் பஞ்சாங்கங்களில் போடப்பட்டு வந்ததும், சிஷ்டாசாரத்தில் நடத்தப்பட்டு வந்ததும் மோகத்தாலென்றும் மோசம் போனதாலென்றும் நமது தீக்ஷிதரவர்கள் செய்தப் பிரதிக்ஞை சரியல்லவென்று சித்தமாயிற்று. ஆனால் புதன் கிழமையிலாவது என்று மஹோதய யோகத்தை புதன் கிழமையில் அவ்வசனம் குறிக்கின்றதேயென்றால் குறிகின்றது. அது

விகல்பமாய் கூறப்பட்டபடியால் அதைசிஷ்டர்கள் இந்த வருஷ பரியந்தமும் அனுஷ்டித்ததாகத் தெரியவில்லை. அதனால் எல்லோரும் பிராசீனாசாரத்தை விடாது நடத்தி சிரேயஸ்ஸை அடைவார்களாக.

V. S. வெங்கட்டராமசாஸ்திரி.

---

# ஸ்ரீகாஞ்சிநகர ஸ்ரீமுகபடனம்.

நாளது அக்ஷயஹு தைமீ 4௳ சோமவாரம் (17—1—27) ஸ்ரீ காஞ்சீமகாஜனங்களின் விசேஷ பக்தியினால் ஸ்ரீமுகபடனம் செய்யவேண்டியதின் பொருட்டு மாலை 7-மணிக்கு ஸ்ரீ மடத்திலிருந்து ஸகல ஸன்னாஹங்களோடும் வேதபாராயணத்துடனும் புறப்பட்டு நாலு ராஜவீதிகளிலும் வலம் வந்து மேலண்டை ராஜவீதி வழியாக மாடவீதியும் சுற்றி ஆலயத்துள் பிரவேசித்து பூர்ணிமை உத்ஸவமானதால் ஸ்ரீஅம்பாள் ஸ்ரீ ஆசார்யாளுடன் பிராகாரம் சுற்றி சுக்கரவாரமண்டபத்தில் ஸ்ரீஅம்பாளையும் ஸ்ரீ ஆசாரியாளையும் எளப்பண்ணி தீபாராதனைகளை செய்துகொண்டு பிரகு ஸ்ரீமுகபடனம் செய்யப்பட்டது. பிறகு வழக்கப்படி பிரசாதங்களும் கொடுக்கப்பட்டன. உள்ளூரில் ஷை அக்கிரஹாரவாசிகளைத் தவிர மற்றுமுள்ள பிராம்மணப் பிரபுக்களும் இதர பிரபுக்களும்கூட இருந்து நடத்தி வைத்தார்கள். இதுவரையில் இம்மாதிரியான விமரிசையாக முன்சமயங்களில் நடக்கவில்லை யென்பது பொது ஜனங்களுடைய அபிப்பிராயம். ஷை ஸ்ரீமுகபடனம் ஆனபிறகு மகாசன்னிதானத்தினுடைய போடோ படங்கள் மகாஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

இப்படிக்கு

S. கச்சபேசுவர சாஸ்திரிகள்.

---

## அகிலபாரத வர்ஷீய ப்ராம்மண மஹாஸம்மேளனம்.

பிரபவஹு வைகாசிமீ 2. 3. 4. மேமீ 15. 16. 17 தேதிகளில் துவாரில் கூடும்.

மற்ற விஷயங்கள் அடுத்த வாரப்பத்திரிகையில் வெளிவரும்.

ப்ராமணன் பத்திராதிபர்.

---